[5th November 1958

The Hon. Sri M. BHAKTAVATSALAM: The Government have already started a Service Centre for the manufacture of farm implements and agricultural machinery at Tiruchirappali and three blacksmithy and carpentry workshops in Pettai (Tirunelveli district) Mannargudi and Cuddalore and an Engineering Workshop at Rajapalayam where also some items offarm implements could be manufactured. It is not therefore, proposed to start another unit in this State for the same purpose.

Srimathi A. S. PONNAMMAL: சபாநாயகர் அவர்களே, என்னுடைய தாலூக்காவில் விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே இந்த மண் வெட்டி, கலப்பை இவையெல்லாம் தேவைப் படுகின்றன. ஆசாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தொழிலை நடத்த அரசாங்கம் பணம் கொடுக்க முன்வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இவ்வாறு தொழிற்சாலை ஏற்படுத்த முன்வந்தால் அதற்கு உதவியளிப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

Sri K. B. S. MANI: ஸார், சீர்காழி தாலூக்காவில் தமிழ் நாடு இண்டஸ்ட்ரியல்ஸ் என்று ஒன்று வைத்து நல்ல முறையில் ஜில்லா பூராவுக்கும், தென் ஆற்காடுக்கும் உதவியளித்து வருகிறார்கள். அவர்கள் விவசாயக் கருவிகள் செய்து வருகிறார்கள். அதனுடைய ஸ்தாபகர்த்தா மிகவும் ஏழ்மையான நிலையில் இருப்பதால், இந்தத் தொழிற் சாலைக்கு சப்ஸிடி கொடுத்து இந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அம்மாதிரி இருந்தால் அரசாங்கத்திடமிருந்து எத்தகைய உதவி வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால் பரிசீலனை செய்து எவ்வளவு உதவி செய்யலாமோ, அதைச் செய்யலாம்.

Sri T. VELUCHAMI: விவசாயக் கருவிகளாகிய மண்வெட்டி, கொழுக் கலப்பை முதலியவைகளுக்கு வேண்டிய இரும்பு தற்சமயம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. முன்னால் கோவாப்பரேடிவ் சொஸைடி மூலமாக இரும்பு வினியோகம் செய்யப்பட்டது போல மீண்டும் வினியோகம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இப்போது இரும்பு பற்றாக்குறையாக இருக்கிறது. அதனால்தான் இந்தக் கஷ்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் எவ்வளவு கூடுமோ அவ்வளவு விவசாயத் தேவைக்கு ஒதுக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகிறது.

Tapping of neera from coconut tree

*883 Q.—Sri S. LAZAR (on behalf of Sri P. S. K. Lakshmipathi Raju): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப் பாரா ?

(அ) மது மாக் தொழிலாளர்கள் குறிப்பிட்ட சில ஜில்லாக்களில் தென்னை மரத்திலிருந்தும் பதனியிறக்க அனுமதியளிக்கப்பட்டிருக் கிறதா ?

(ஆ) அப்படியானால், இந்த முறை மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக் கப்படுமா ?

5th November 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Licences have been granted to members of Jaggery manufacturing Co-operative Societies to tap Coconut trees for neera for the manufacture of Jaggery in the Coimbatore district only.

(b) The answer is in the negative.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே பதனீர் விற்பனையானது ஒரு குறிப்பிட்ட இடத்திலே நடக்கவேண்டுமென்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி இருப்பதனால், பதனீர் விற்காமல் பாதிக்கப்படுவதால் எல்லா இடங்களிலும் விற்கலாம் என்ற முறையில் உத்திரவு போடப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸார், தென்னையிலிருந்து பதனீர் இறுக்குவதிலே, ஏற்கெனவே கள் இறக்கிடவர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால், பதனீர் இறக்க உத்திரவு கொடுத்தால், வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டதற்கு ஒப்பாக ஆகாதா ? இனி தென்னை மரத்திலிருந்து பதனீர் இறக்குவதை தடை செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முதலிலேயே கோவை மாவட்டத்தில் மட்டும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் சொன்ன காரணத்திற்காகத்தான் மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கவில்லை.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த பனை மரத்தில் பதனீர் இறக்க லைஸென்ஸ் வழங்குவதன் காரணமாக தஞ்சை ஜில்லாவிலே உள் பக்கத்திலே சுண்ணும்பு தடவினால் பதனீராகவும், சுண்ணும்பு தடவாவிட்டால் கள்ளாகவும் ஆகி மது விலக்குக் குற்றங்கள் அதிகமாகின்றதால், இதையெல்லாம் விசாரணை செய்து பனை மரத்தை பதனீர் இறக்க குத்தகைக்கு விடக்கூடாது என்று உத்திரவு போடுவார்களா ? மேலும் பதனீர் இறக்குவதால் மதுவிலக்கு குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்ற காரணத்தினால் பனை மரத்திற்கு இந்த லைஸென்ஸ் கொடுக்கும் முறை ரத்து செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜில்லா பிளானிங் கமிட்டி கூட்டத்தில் இன்னும் இதை விஸ்தரிக்கவேண்டுமென்ற யோசனை கூறப்பட்டது. விஸ்தரிக்கப்பட்டால் தவறுகள் ஏற்படும் என்றுதான் விஸ்தரிக்கப்படவில்லை.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த பதனீர் இறக்குவதற்கு கொடுக்கப்படும் லைஸென்ஸ் வரவாக் குறைந்துகொண்டே வருகிறது. இதில் அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தவறுதல்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. அது குறைந்தால் இது குறையாது. தவறுதல்கள் அதிகமானல், லைஸென்ஸ்கள் குறையத்தான் குறையும்.

Town-Planning Schemes.

*884 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether all Municipalities in this State have submitted Town-Planning Schemes under section 8 of the Madras Town-Planning Act, 1920?